13.06.2025 O.S. 147/2021 வா.சா.2 நிறைகுளத்தான், த/பெ. பரமசிவம்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

தபசில் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 1285. இந்த சர்வே நம்பரில் உள்ள விஸ்தீரணம் 4 ஏக்கர் 93 செண்ட். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதிகள் அவர்களின் சொத்தை மீட்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கின் பிராதில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களுக்கு பாத்தியப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கின் பிராது பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை பற்றி எனக்கு தெரியாது. சண்முகத்தம்மாளுக்கு 2 மகன்கள் என்றால் சரிதான். என்னுடைய தந்தை பெயர் பரமசிவம், சித்தப்பா ஆறுமுகம். எனது தந்தையும், சித்தப்பாவும் 4 ஏக்கர் 93 செண்ட் பொறுத்து வாய்மொழியாக பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த 4 ஏக்கர் 93 செண்ட்ல் மேல்பாதி எனது தந்தைக்குரியது. கீழ்பாதி எனது சித்தப்பாவுக்குரியது. மேல்பாதி சொத்தை எனது தந்தை யாருக்கு விற்பனை செய்தார் என்பது எனக்கு தெரியாது. எனது அப்பாவும், சித்தப்பாவும் இந்த 4 ஏக்கர் 93 செண்ட் பொறுத்து வேலாயுதராஜா என்பவருக்கு கடந்த 06.12.1993ம் தேதியன்று பவர் எழுதிக்கொடுத்தாரா என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி விவரமானது எனது அம்மா சொல்லி தெரியும். மேற்படி சொத்தைப் பொறுத்து வில்லங்க ஆவணம் பார்த்தேனா என்றால் எனது சித்தப்பா பார்த்திருப்பார். இந்த 4 ஏக்கர் 93 செண்ட் பொறுத்து வேலாயுதராஜா என்பவர் நல்லதாய் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் கிடையாது. மேற்படி நல்லதாய் என்பவர் அகிலாண்டத்திற்கு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் கிடையாது. அகிலாண்டம் முப்பிடாதிக்கு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் கிடையாது. முப்பிடாதி என்பவர் அரிலிங்கம் என்பவருக்கு பவர் பத்திரம்

பிறப்பித்து கொடுத்துள்ளார் என்றால் கிடையாது. அரிலிங்கம் என்பவர் பிரதிவாதிக்கு கிரயம் பிறப்பித்துக்கொடுத்தார் என்றால் கிடையாது. மேற்படி சொத்தின் அனுபவம் யாரிடம் உள்ளது என்றால் எனது சித்தப்பாவின் மகனின் அனுபவத்தில் உள்ளது. மேற்படி அனுபவத்தை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சொத்தின் அனுபவமானது பிரதிவாதியின் வசம் தான் உள்ளது என்றும், பிரதிவாதி பெயரில் பட்டா எண்.4034 ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அப்படி எனக்கு தெரியாது. பிரதிவாதி 4 ஏக்கர் 93 செண்ட்ல் கீழ்புறத்தில் 41.80 செண்ட்டை பொறுத்து ஆலடி அருணா பவுண்டேசனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 4 ஏக்கர் 93 செண்ட்ல் கீழ்புறத்தில் 41.80 செண்ட்டை பொறுத்து ஆலடி அருணா பவுண்டேசன் பெயரில் பட்டா எண்.5651 ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 4 ஏக்கர் 93 செண்ட்–ஐ 1285/1, 1285/2 என ஆலங்குளம் வருவாய்துறை அலுவலகம் உட்பிரிவு செய்துள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் இந்த வழக்கினை பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் கடந்த 22.08.2008ம் தேதியில் ரவிச்சந்திரன் என்பவருக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு சுப்புலட்சுமி, புஷ்பம், கருப்பசாமி, திராவிடசெல்வி, லீலா, நல்லசாமி, முத்துப்பாண்டி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். வாதிகள் பிராதின் தபசில் சொத்தை விற்பனை செய்துள்ளதால் வாதிகள் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி ரவிச்சந்திரனின் கிரய ஆவணத்தை மோசடியான ஆவணம் என மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுத்தார் என்றால் தெரியாது. மாவட்ட பதிவாளர் அலுவலகம் ரவிச்சந்திரனின் கிரய ஆவணத்தை மோசடியான ஆவணம் என உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் இல்லை. பிரதிவாதியின் முன் பாக்கியஸ்தர்களிடமிருந்து பிரதிவாதி 1993ம் ஆண்டு கிரயம் பெற்று அனுபவம் செய்து வருவதால் வாதிகளுக்கு பாகப்பிரிவினை பரிகாரம்

கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் ஆவணம் மோசடியான ஆவணம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 2008 ம் ஆண்டு கிரயம் வாங்கியதால் வாதிகளுக்கு ஆ பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கை பிரதிவாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு மேற்படி சொத்து பூர்வீக சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்து பூர்வீக சொத்தாகும். மேற்படி சொத்தானது பூர்வீகம் என்பதை காண்பிப்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவும், சித்தப்பாவும் சொத்தை விற்பனை செய்தததால் மேற்படி சொத்தானது அவர்களது தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா விற்றுவிட்டார். எனது சித்தப்பா ஆறுமுகம் விற்கவில்லை. எனது அப்பாவும், சித்தப்பாவும் பவர் பத்திரம் 1993 ம் வருடம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி பத்திரம் செல்லாது என்று பிராதில் பரிகாரம் கோரவில்லை என்றும், அதனால் நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.